## ஈரோடு மாவட்டம்
## கொளப்பலூர் பேரூராட்சி

**ந.க.எண். 172 /2022** **நாள் : 11.05.2022**

# தூய்மை இந்தியா திட்டம் 2.0 – 2021–2022

## 1998ம் வருடத்திய தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் தமிழ்நாடு சட்டம் 43/1998) விதிமுறைகளின் படி அறிவிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஈரோடு மாவட்டம், கொளப்பலூர் பேரூராட்சி பகுதியில் பட்டியலில் கண்டுள்ள வளர்ச்சிப்பணிகளை செய்து முடிக்க தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகின்றன.

மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கொளப்பலூர் பேரூராட்சியின் சார்பாக அதன் செயல்அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் **25.05.2022–ம் தேதி புதன்கிழமை** பிற்பகல் 3.00 மணி வரை கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு கொளப்பலூர் பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும் என அறிவிக்கப்படுகிறது.

ஒப்பந்தப்புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்டு, உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும்,டெண்டர் தேதி மற்றும் நேரவிபரங்களுடன் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் **25.05.2022–ம் தேதி புதன்கிழமை** பிற்பகல் 3.30 மணிக்கு பிறகு பேரூராட்சியில் செயல்அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் திறந்து பரிசீலனை செய்யப்படும். வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை **25.05.2022–ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3.00**மணி வரை **https://www.tenders.tn.gov.in** இணையதள முகவரிகளில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது பட்டியலில் கண்டுள்ள தொகையினை ரொக்கமாகவோ, வங்கி வரைவோலை அல்லது வங்கி கொடு ஆணை சமர்பித்து கொளப்பலூர் பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 24.05.2022ம் தேதி அலுவலக நேரத்திற்குள் கீழ்க்கண்ட பட்டியலில் கலம் எண்.4ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை நேரடியாக பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளிகளை கணினி மூலமே பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவங்களை கொளப்பலூர் பேரூராட்சி அலுவலகத்தில் நேரிடையாக **25.05.2022–ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள்** ஒப்படைக்கலாம்.

ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள், ஒவ்வொரு வேலைக்கும் செலுத்த வேண்டிய டேவணித் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டால் செலுத்தப்பட வேண்டிய காப்புத் தொகை, சால்வன்சித் தொகை மற்றும் இதர விபரங்கள் இவ்வலுவலகத்தில் வேலை நாட்களிலும் வேலை நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

## ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்

1. ஒப்பந்ததாரர்கள் பேரூராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களாக இருக்க வேண்டும்.
   ஒப்பந்தப்பதிவை நாளது வரை புதுப்பித்திருக்க வேண்டும்.
2. ஒவ்வொரு வேலைக்கும் நிர்ணயிக்கப்பட்ட வைப்புத் தொகை செலுத்திய இரசீது இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகளும் குறிப்பிட்ட நேரத்திற்கு பிறகு கொடுக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளும் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

3. செலுத்தப்படும் டேவணித் தொகைக்கு எவ்வித வட்டியும் வழங்கப்பட மாட்டாது. டேவணித் தொகை ரொக்கமாகவோ, அல்லது டிமாண்ட் டிராப்ட் மூலமாகவோ செலுத்தலாம். அரசால் வெளியிடப்பட்ட தேசிய சேமிப்பு பத்திரம் அல்லது அரசு கடன் பத்திரம் ஆகியவைகளும் ஏற்றுக் கொள்ளப்படும். காலம் கடந்த பத்திரங்கங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. டெண்டர் ஏற்றுக் கொள்ளப்பட்டால் மேற்படி பத்திரங்களை செயல் அலுவலர் பெயருக்கு மாற்றி எழுதித் தர வேண்டும்

4. ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிட்ட உறைக்குள் வைத்து உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும் டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதி செயல் அலுவலர் கொளப்பலூர் பேரூராட்சி என்று முகவரியிட்டு கொடுக்க வேண்டும். உறையில் ஒப்பந்ததாரரின் முழு அஞ்சல் முகவரியும் இருக்க வேண்டும்.

5. பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஏதேனும் ஒன்றையோ அல்லது அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையோ எவ்வித காரணம் கூறாமல் ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ பேரூராட்சி மன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

6. ஒப்பந்தந்தாரர் தம்மால் அளிக்கப்பட்ட டெண்டரை எவ்வித காரணம் இல்லாமல் விலக்கி கொண்டால் ( டெண்டரை ஏற்றுக் கொள்பவர் முடிவு செய்ய வேண்டும்) அவரால் பின்னர் அளிக்கும் டெண்டர்களை எவ்வித காரணம் இன்றி நிராகரிக்க நேரிடும்.

7. வரப்பெற்று முடிவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு பேரூராட்சியில் மன்ற அங்கீகாரம் பெற்ற பின்னரே வேலை உத்திரவு வழங்கப்படும்.

8. ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு வேலை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட மூன்று தினங்களுக்குள் அதற்குரிய படிவத்தில் ரூ.20/– மதிப்புள்ள ஸ்டாம்பு பேப்பரில் உடன்படிக்கை எழுதி தர வேண்டும். உடன்படிக்கை படிவத்தை ரூ.1/– ( ஒன்று) பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

9. வேலை உத்தரவில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்குள் வேலையை முழுமையாக முடித்துக் கொடுக்க வேண்டும். இல்லையெனில் வேலை ரத்து செய்யவும் அபராதம் விதிக்கவும் செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. இதனால் ஏற்படும் அனைத்து இழப்புக்கும் ஒப்பந்ததாரர்களே பொறுப்பாவார்கள்.

10. ஒப்பந்தப்புள்ளி கொடுத்த பின்பு பின் வாங்கும் ஒப்பந்ததாரர்களின் டேவணித் தொகையும் மேலே கண்டுள்ள 8ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை சரிவர நிறைவேற்றாத ஒப்பந்ததாரரின் வைப்புத் தொகைகளையும் எவ்வித அறிவிப்பும் இன்றி பறிமுதல் செய்யப்படும்.

11. குறிப்பிட்ட தேதிக்குள் வேலையை ஆரம்பிக்காவிட்டால் ஒப்பந்ததாரர் அவ்வேலைக்கென செலுத்தப்பட்ட டேவணித் தொகையை பறிமுதல் செய்ததாகக் கருதப்பட்டு பேரூராட்சியின் நிதியில் சேர்க்கப்படுவதுடன் அவ்வேலைக்கு மீண்டும் வேறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு வேலை செய்து முடிப்பதில் ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும் முந்தைய ஒப்பந்ததாரரே பொறுப்பு ஏற்க வேண்டும்.

12. சாலை வேலைகளை பொறுத்த வரையில் கிராவல் மற்றும் ஜல்லி சேகரத்திற்கு மட்டும் தொகை பட்டுவாடா செய்யப்படமாட்டாது. பரத்தல் வேலையை நல்ல முறையில் செய்து வேலை முழு அளவில் முடித்த பின்னர் தான் முழுத் தொகையும் பட்டுவாடா செய்ய இயலும்.

13. சிமெண்ட் பேரூராட்சியில் இருப்பு இருப்பின் சப்ளை செய்யப்படும். சிமெண்ட் பேரூராட்சியில் இருப்பு இல்லாத பட்சத்தில் ஒப்பந்ததாரர்களே சிமெண்ட் வாங்கிக் கொள்ள வேண்டும். இதன் பொருட்டு வேலைகள் பாதிக்கக் கூடாது. இதற்கு சம்மதம் அளிக்கும் நபர்கள் மட்டுமே டெண்டர் கொடுக்க வேண்டும்.

14. கட்டுமான வேலைக்கென சேகரம் செய்யப்படும் பொருட்கள் பொறியாளரால் நிராகரிக்கப்பட்டால் ஏழு தினங்களுக்குள் அப்பொருட்களை அப்புறப்படுத்திக் கொள்வதுடன் பொறியாளரால் ஏற்றுக் கொள்ளப்படும் வகையில் தரம் வாய்ந்த மாற்றுப் பொருட்களை வேலை நடத்தும் இடத்தில் ஒப்பந்ததாரர் சேகரித்திடல் வேண்டும். தவறினால் நிராகரிக்கப்பட்ட பொருட்கள் பேரூராட்சி பொருட்களாக கருதி அப்புறப்படுத்தப்படும்.

15. யாருடைய டெண்டர் ஏற்றுக் கொள்ளப்படவில்லையோ அவரால் செலுத்திய டேவணித் தொகை விண்ணப்பத்தின் பேரில் திருப்பி கொடுக்கப்படும்.

16. வேலையை முடித்த பின்னர் பட்டியலில் கீழ்காணும் தொகைகள் கழித்துக் கொள்ளப்பட்டு மீதி தொகையை மட்டும் பட்டுவாடா செய்யப்படும்.

| வ எண் | விபரம் | பிடித்தம் செய்யும் அளவு |
|---|---|---|
| 1 | கூடுதல் வைப்புத்தொகை | 3% |
| 2 | வருமான வரித்தொகைப் பிடித்தம் | 2% |
| 3 | GST தொகை பிடித்தம் | 2% |
| 4 | நிறுத்தி வைக்கப்படும் தொகை | 5% |
| 5 | தொழிலாளர் நலநிதி சந்தாத் தொகை | 1% |

17. தொடர்புடைய வேலைகளுக்கான பட்டியல் தணிக்கை செய்யப்பட்டு தணிக்கையில் தடை ஏதும் இல்லை என முடிவு செய்த பின்னர் தான் அவ்வேலைகளுக்கான ஒப்பந்ததாரரின் செலுத்தப்பட்ட டேவணித் தொகை விண்ணப்பத்தின் பேரில் திருப்பித் தரப்படும்.

18. வேலைகள் சம்பந்தமாக அவ்வப்போது அரசினரால் வெளியிடப்படும் உத்திரவுகளுக்கு உட்பட்டு ஒப்பந்ததாரர்கள் வேலைகள் செய்ய வேண்டும்.

19. வேலைகள் சம்பந்தமாக இதர விபரங்கள் வேண்டுவோர் அலுவலக வேலை நாட்களில் அலுவலக வேலை நேரத்தில் செயல் அலுவலரிடம் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் (ரூ) | செலுத்த வேண்டிய வைப்புத் தொகை (ரூ) | டெண்டர் ஷெட்யூல் படிவம் (விற்பனை வரி உட்பட) (ரூ) | வேலை செய்து முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | கொளப்பலூர் பேரூராட்சி வார்டு எண். 11 எல்.எம்.காலனியில் புதிய கழிப்பிடம் கட்டுதல். | 9.00 | 18000/– | 3540/– | 3 மாதம் |

செயல் அலுவலர்
கொளப்பலூர் பேரூராட்சி
ஈரோடு மாவட்டம்.

**பெறுநர்.**
பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள்,
கொளப்பலூர் பேரூராட்சி

**நகல்.**
1. அலுவலக விளம்பரப் பலகைக்கு.
2. பேரூராட்சிகள் உதவி இயக்குநர், அவர்கள் ஈரோடு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள் உதவி இயக்குநர் அலுவலகம், ஈரோடு.
4. உதவி பொறியாளர் பேரூராட்சி அலுவலகம், கூகலூர் (தொகுதி)